# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மகளிர் நிர்வாகிகள், தேர்தல் பரப்புரை திட்டமிடல் கலந்தாய்வுக் கூட்டம்!



**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்டபட்ட மகளிர் நிர்வாகிகள், தேர்தல் பரப்புரை திட்டமிடல் கலந்தாய்வுக் கூட்டம் 26.3.2026, வியாழக்கிழமை அன்று நடைபெறும் விவரம் பின்வருமாறு:-

| நாள் | பகுதி | இடம் |
|---|---|---|
| 26.3.2026<br>வியாழக்கிழமை<br>காலை<br>10.30 மணி | மகளிர் நிர்வாகிகள்<br>தேர்தல் பரப்புரை திட்டமிடல் கலந்தாய்வில் உரையாற்றுபவர்<br>திருமதி. சே.மெ.மதிவதினி<br>திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர் | சிராஜ்<br>மகால்,<br>எழும்பூர். |

மேற்கண்ட மகளிர் நிர்வாகிகள், தேர்தல் பரப்புரை திட்டமிடல் கலந்தாய்வுக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து மகளிர் நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் களப்பணியாற்றும் இளம்பெண்களுடன் தேர்தல் வியூகம் குறித்து நேற்று மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற பயிற்சி கூட்டத்தில் ஊடகவியலாளர் செந்தில் வேலன், திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி ஆகியோர் உரையாற்றினர். இதில் மேயர் ப்ரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, பகுதி கழக செயலாளர்கள் எம். சாமிகண்ணு செ. தமிழ்வேந்தன் சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், மற்றும் 500க்கும் மேற்பட்ட களப்பணியாற்றும் பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான இடைவெளி

# 35 நாட்களாக அதிகரிக்கப்பட்டதால் மக்கள் அதிர்ச்சி!

சென்னை,மார்ச்.26-

சிலிண்டர் முன்பதிவு இடைவெளி 35 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பாரத் பெட்ரோலியம் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியது. சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான இடைவெளி 35 நாட்களாக அதிகரிக்கப்பட்டதால் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.



ஏற்கனவே சிலிண்டர் தட்டுப்பாடு நிலவும் நிலையில் முன்பதிவுக்கான அவகாசம் நீட்டிப்பால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். நகர்ப்புறங்களில் 25 நாட்கள், கிராமப்புறங்களில் 45 நாட்கள் இடைவெளியில் சிலிண்டர் முன்பதிவு செய்யலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

ஒன்றிய அரசு அறிவிப்பை நம்புவதா? அல்லது கேஸ் ஏஜென்சி அனுப்பிய தகவலை நம்புவதா? என்று வாடிக்கையாளர்கள் குழப்படமடைந்துள்ளனர். சிலிண்டர் இல்லாமல் தவிக்கும் நகர்புற மக்கள் 35 நாட்கள் காத்திருந்தே முன்பதிவு செய்ய முடியும் என்கிற நிலை இருக்கிறது.

இதுபற்றி எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்தல்களை வழங்கி நிலைமையை சரிசெய்ய வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## தி.மு.க. மருத்துவ அணி

# தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

**மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட டாக்டர் க. பவித்ரா அவருக்குப் பதிலாக, **டாக்டர் டி. வசந்த்,** (3/104, கிழக்குத் தெரு, நயினாம்பட்டி, குருவிகுளம், திருவேங்கடம் வட்டம், தென்காசி மாவட்டம்) அவர்கள் **தென்காசி மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-03-2026.

**டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!**

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக **திருமதி. எஸ்.லிங்க சாந்தி** (செட்டியார் கடை தெரு, காவல்கிணறு - 627105, திருநெல்வேலி மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-03-2026.

**நாமக்கல் ப.இராணி,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## ரயில் பயணிகளுக்கு அதிர்ச்சி

# டிக்கெட் ரத்து செய்தால் ரீபண்ட் இல்லை!

### புதிய விதிமுறை அமலாகிறது

புதுடெல்லி,மார்ச்.26-

ரயில் பயணம் வசதியானதாகவும் மலிவானதாகவும் இருப்பதால் அனைத்து தரப்பு மக்களின் முதல் விருப்பமாக ரயில் போக்குவரத்து இருக்கிறது. ஊருக்கு செல்வது உறுதியாகிறதோ இல்லையோ முதலில் ரயிலில் டிக்கெட் எடுத்து வைத்து பிறகு கடைசி நேரத்தில் கேன்சல் செய்வதை பலர் வழக்கமாக வைத்துள்ளனர். அப்படிப்பட்டவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் ரயில்வே டிக்கெட் ரத்து விதிமுறைகள் மாறப் போகிறது.

மாறப் போகும் ரயில்வே விதிமுறைகள் தொடர்பாக ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேற்று தனது செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கினார். அவர் கூறியிருப்பதாவது: ரயில் பயணிகள் சேவைகளை மேம்படுத்த 5 முக்கிய சீர்த்திருத்தங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். இனி ரயில் புறப்படுவதற்கு 8 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில், உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டை ரத்து செய்தால் பணம் திரும்ப வழங்கப்படாது.

இந்த நடவடிக்கை கடைசி நேர ரத்துகளைக் குறைக்கவும், மற்ற பயணிகளுக்கு இருக்கைகள் கிடைப்பதை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ரயில் புறப்படுவதற்கு முன்பாக 24 மணி நேரம் முதல் 8 மணி நேரத்திற்குள் ரத்து செய்யப்படும் டிக்கெட்களுக்கு 50 சதவீத கட்டணம் கழிக்கப்படும். ரயில் புறப்படுவதற்கு முன்பாக 72 மணி நேரம் முதல் 24 மணி நேரத்திற்குள் ரத்து செய்யப்படும் டிக்கெட்களுக்கு 25 சதவீத கட்டணம் கழிக்கப்படும். 75 சதவீத தொகை திருப்பி தரப்படும்.

ரயில் புறப்படுவதற்கு முன்பாக 72 மணி நேரத்திற்கு மேல் ரத்து செய்யப்படும் டிக்கெட்களுக்கு ரத்து கட்டணம் மட்டும் கழிக்கப்பட்டு மீதமுள்ள அதிகபட்ச தொகை திருப்பி தரப்படும். கவுண்டரில் வாங்கும் டிக்கெட்களை ரத்து செய்வதற்கான இடக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட உள்ளன. இனி பயணிகள் எந்த நிலைய கவுண்டரிலும் ரத்து செய்யலாம்.

பயணம் செய்யாத டிக்கெட்களுக்கு ரீபண்ட் பெறும் டிடிஆர் வசதி இடிக்கெட்களுக்கு ரத்து செய்யப்படும். தானியங்கி முறையில் ரீபண்ட் தரப்படும். இந்த விதிமுறை மாற்றங்கள் வரும் ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 15க்குள் படிப்படியாக அமல்படுத்தப்படும். இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

இனி கவுண்டர் டிக்கெட்டுகளுக்கு, ரயில் புறப்படும் நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வரையிலும் பயண வகுப்பை மாற்ற அனுமதிக்கப்படும். இதற்கு முன்பு, பயணப் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்பு வரை மட்டுமே பயண வகுப்பை மாற்ற முடிந்தது. இது பயணிகளுக்கு மிகவும் வசதியான பயணத்தை வழங்கும் என அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.

★ 30 நிமிடங்கள் வரை ஏறுமிடத்தை மாற்றலாம்

பயணிகள் இப்போது ரயில் புறப்படும் நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வரை தாங்கள் ஏறும் நிலையத்தை மாற்றிக்கொள்ளலாம். இதற்கு முன்பு, பயணப் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்பு மட்டுமே ஏறும் இடத்தை மாற்ற அனுமதிக்கப்பட்டது. பல ரயில் நிலையங்களைக் கொண்ட பெரிய நகரங்களில் இந்த அம்சம் குறிப்பாகப் பயனுள்ளதாக இருக்கும். இது பயணிகள் தங்களுக்கு வசதியான நேரத்தில் அருகிலுள்ள எந்த நிலையத்திலிருந்தும் தங்கள் பயணத்தைத் தொடங்க அனுமதிக்கும் என அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் திமுக சட்டத்துறை சார்பில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தல் பணிகளுக்காக பாப்பிரெட்டிப்பட்டி மாவட்ட கழக செயலாளர் முகாம் அலுவலகத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி.சந்திரசேகரன் முன்னிலையில் ,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்,முன்னாள் அமைச்சர் முனைவர் பி. பழனியப்பன் தலைமையில் வார் ரூம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சில் வேட்பாளர் வழக்கறிஞர் கதிரவன் மற்றும் கழக வழக்கறிஞர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்ட நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் பி.எஸ். சந்துரு ஏற்பாட்டில் வட்ட அவைத் தலைவர் து. எழில்குமார் தலைமையில் புழல் மெர்சி நகரில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். வட்ட நிர்வாகிகள் மு. விக்னேஸ்வரன், வக்கீல் டி.ராஜாராம், மேச்சிலா உதயகுமார், சொ. சரவணன், க. சிவகுமார்,டி. நெல்சன் ராஜ், க.ந.க.சைமன், எஸ். முத்துவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## பி.எஸ்,சந்துரு ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி 23வது வட்ட நிர்வாகிகள் கூட்டம்!

# திராவிட மாடல் அரசின் சாதனைகளை வீடு வீடாக விளக்கி வெற்றிக்குப் பாடுபடுவோம்!

### புழல் எம்.நாராயணன் முன்னிலையில் தீர்மானம் !

மாதவரம்,மார்ச்.26-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி 23வது வட்ட நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் முகவர்கள் கூட்டம் புழல் மெர்சி நகரில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு ஏற்பாட்டில் வட்ட அவைத் தலைவர் து. எழில்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி, மீண்டும் திராவிட மாடல் 2.0 அரசு மலர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை பொறுப்பேற்க வீடு வீடாக சென்று திராவிடமாடல் அரசின் சாதனைகளை விளக்கி கழகத்தின் வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. எல்லோருக்கும் எல்லாம் ஆட்சி தொடர, ஏழை, எளிய, பாட்டாளி மக்கள் வாழ்வு வளம் பெற கழக ஆட்சி மலர ஓய்வறியாமல் உழைப்போம் என்றும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தமிழ்நாட்டு மகளிருக்கு எண்ணிலடங்காத சாதனைகளை நிகழ்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

வெல்லும் தமிழ் பெண்கள் முன்னெடுப்பில் வீடு வீடாக சாதனைகளை சொல்லி நிறைவேற்றிக் கொடுத்த 23வது வட்டத்திற்குட்பட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், பாக இளைஞர்கள் அனைவருக்கும் இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் வட்ட துணைச் செயலாளர்கள் மு. விக்னேஸ்வரன், வக்கீல் டி. ராஜாராம், மேச்சிலா உதயகுமார், சொ. சரவணன், க. சிவகுமார், டி. நெல்சன் ராஜ்,க.ந.க.சைமன், எஸ். முத்துவேல், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் எஸ். சுதா, பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜேஸ்வரி,சகிலா, பாக முகவர்கள் நடராஜன், ஆர். மோகன், எம். உதயகுமார், அரிகிருஷ்ணன், மஞ்சுளா, ராஜா, ஜமால் பாஷா, நாகையண், தங்கவேல்,சோழன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு !**

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராக திருமதி. **ச. ஐஸ்வர்யா சக்திவேல்** (1/ஏ, சுடலைஆண்டவர் கோயில் தெரு, திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-03-2026.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

## தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ,எம்.பி. அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### வேலூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - எம். பாலாஜி 77, பெரிய தெரு, கர்ணாம்பட்டு, வேலூர் சுகர் மில், காட்பாடி - 632519, வேலூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - எம்.ஆர். பாலாஜி 7, மேற்கு தெரு, எம்.ஜி.ஆர். நகர், காட்பாடி - 632007, வேலூர் மாவட்டம்.

அமைப்பாளர் - பி.எச். கோபாலகிருஷ்ணன் 241, வேலூர் ரோடு, தாராபடவேடு, காட்பாடி, வேலூர் - 632007.

துணை அமைப்பாளர்கள் - 1) பி.எஸ். தரணிவாசன் 11, பெருமாள் கோயில் தெரு, தாராபடவேடு, காட்பாடி - 632007, வேலூர் மாவட்டம்.

2) ஜெ. ராம்நாத் 1/49, கரசமங்கலம் மேட்டூர், கரசமங்கலம் அஞ்சல், காட்பாடி தாலுகா - 632202, வேலூர் மாவட்டம். 3) கே. ஜெயமுருகன் 2/23பி, பிள்ளையார் கோயில் தெரு, பி. என். பாளையம், புதூர், கே.வி.குப்பம் தாலுக்கா, இலத்தேரி - 632202, வேலூர் மாவட்டம். 4) எஸ். அருண்வேந்தன் 29/13எப். ஒலக்காசி கிராமம், வேப்பூர் அஞ்சல், குடியாத்தம் தாலுக்கா - 635803, வேலூர் மாவட்டம். 5) பி. சதிஷ் 13, இளங்கோ தெரு, காட்பாடி - 632007, வேலூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-03-2026.

**என்.ஆர். இளங்கோ எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஜெ. வீரமணி அறிவிப்பு!**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப் படுகிறார்கள்

### ஈரோடு மத்திய மாவட்டம்

அமைப்பாளர் - ராசு (எ) எஸ். கோபால் 9, சரளை, பொன்முடி அஞ்சல், பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். வினோத் குமார் 4/199, அண்ணா நகர், ஓரிச்சேரி அஞ்சல், பவானி, ஈரோடு. 2) மோ. நவீன்குமார் 108ஏ, காவேரி வீதி, பவானி, ஈரோடு மாவட்டம் - 638301. 3) எஸ். கோபாலகிருஷ்ணன் 35, செம்பூதம்பாளையம், பெரியபுலியூர் அஞ்சல், கவுந்தம்பாடி வழி, பவானி - 638455, ஈரோடு மாவட்டம். 4) ம. பவித்ரா 4ஏ/ஏ, ஜீவா நகர், பெருந்துறை, ஈரோடு மாவட்டம். 5) பெ. சதீஸ்குமார் 12, காந்தம்பாளையம், கருமாண்டிசெல்லிபாளையம், பெருந்துறை - 638052, ஈரோடு மாவட்டம். 6) கே. ஹரிபிரசாத் 1, ஈஸ்வரன் கோவில் வீதி, குன்னத்தூர் - 638103, ஈரோடு மாவட்டம். 7) ந. ஹரிபிரகாஷ் 76/37, வெள்ளியம்பாளையம், கருமாண்டிசெல்லிபாளையம், பெருந்துறை - 638052, ஈரோடு மாவட்டம்.

### வேலூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - டி. சீனிவாசன் 11, 3வது மேற்கு குறுக்கு சாலை, காந்தி நகர், வேலூர் - 632006.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். மணிகண்டன் 1/104, படவேட்டம்மன் கோவில் தெரு, புதிய அக்ராவரம், வாலாஜா, இராணிப்பேட்டை - 632405. 2) பி. சேதுமாதவன் 2/85, அரசமரத் தெரு, வஞ்சூர், சேனூர் அஞ்சல், காட்பாடி, வேலூர் - 632006. 3) டி. ஸ்டாலின் 2/6, உதயர்த் தெரு, கரசமங்கலம், காட்பாடி, வேலூர் - 632202. 4) பி.எம். குணசேகரன் 1/129, பிள்ளையார் கோவில் தெரு, பிரம்மபுரம், காட்பாடி, வேலூர் - 632014. 5) ஏ. சுரேஷ் 1/6, பழைய காவல் நிலையம் தெரு, இலத்தேரி, கே.வி. குப்பம், வேலூர் - 632202 6) வி. பவித்ரா 2/6ஏ, அம்பேத்கர் தெரு, சென்னாங்குப்பம், கே.வி. குப்பம், வேலூர் - 632209.

### ஈரோடு தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - எம். தனசேகர் நஞ்சை ஊத்துக்குளி அஞ்சல், மொடக்குறிச்சி - 638104, ஈரோடு மாவட்டம்.

### மதுரை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். சசிக்குமார் 2/99, மெயின் தெரு, டி. ஆண்டிப்பட்டி, டி. வாடிப்பட்டி, மதுரை - 625218 2) ஏ. சுரேஷ் 5/6, கிடாரிப்பட்டி அஞ்சல், மேலூர், மதுரை. 3) ஏ. இளவரசன் வஞ்சி நகரம், கொட்டாம்பட்டி, மேலூர், மதுரை. 4) கே. விக்னேஷ்வரன் பிளாட் எண். 7, வி.கே.பி. நகர், 5வது தெரு, மாடக்குளம் மெயின் ரோடு, பழங்காநத்தம், மதுரை. 5) ஜி.பி. மணிகண்டன் 14, என்.எஸ். கே. நகர், 1வது தெரு, பாரதியார் ரோடு கடைசி, ஜெய்ஹிந்த்புரம், மதுரை - 625001.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - கே.சி.ஆர். தங்கராஜ் 40-பி, இரத்தினம் பிள்ளை தெரு, கடத்தூர் அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-03-2026.

**ஜெ. வீரமணி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் – மீஞ்சூர் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் கஸ்தூரி மகேந்திரன் இல்ல விழா தச்சூரில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு வாழ்த்தினார். இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றியச் செயலாளர்கள் ஆ.ராஜா, வே.ஆனந்தகுமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஏ. கே.சம்பத்,முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன், நிர்வாகிகள் வி.குமார், ஜி.ஸ்ரீதர்,மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.